**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Summary Trial Case No. 167/2025**
**Prosecution Witness:1**

| | | | |
|---|---|---|---|
| Name | **சீனிவாசன்** (PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of March 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கொடுமுடி காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். எனது காவலர் எண்.1272 ஆகும். கடந்த 02.04.2025ம் தேதி பயிற்சி உதவி ஆய்வாளர் கற்பகம் அவர்களுடன், நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சிறப்பு உதவி ஆய்வாளர் அப்பாதுரை என்பவரும் கொடுமுடி காவல்நிலைய சரக பகுதிகளான கொடுமுடி, சாலைபுதூர், ஆகிய இடங்களில் குற்றத்தடுப்பு ரோந்து அலுவலாக சென்று ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது மதியம் சுமார் 01.30 மணியளவில் ஒத்தக்கடை, செல்வராகவன் டீக்கடை அருமகில் கண்காணித்து கொண்டிருந்தபோது ரகசிய தகவலாளி அடையாம் காண்பித்த நபரை பிடித்து பயிற்சி உதவி ஆய்வாளர் விசாரிக்க மேற்படி நபர் தனது பெயர் சதாசிவம் த/பெ.சுப்பையன் ஒத்தக்கடை என்றும், அவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட, அனுமதியில்லாத வெளிமாநில கேரள லாட்டரி டிக்கெட்டுகளை விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

2. மேற்படி நபரை வெளிமாநில லாட்டரி டிக்கெட்டுகளை விற்பனை செய்த குற்றத்திற்காக பயிற்சி உதவி ஆய்வாளர் சுமார் 01.30 மணியளவில் கைது செய்து, மேற்படி நபர் அதிக பண லாபத்திற்காக விற்பனை செய்த கேரள லாட்டரிகள் 12 எண்ணிக்கை, மற்றும் லாட்டரி விற்பனை செய்த பணம் ரூ.3000/–(6x500) எடுத்து ஆஜர் செய்ததை பயிற்சி உதவி ஆய்வாளர் மதியம் 01.45 மணி சுமாருக்கு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 09:03:13 +0530

கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தால் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் அப்பாதுரையும் சாட்சியாக இருந்து கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள 12-லாட்டரி டிக்கெட்டுகள் மற்றும் பணம் 6x500=3000/- பயிற்சி சார்பு ஆய்வாளர் எதிரி சதாசிவத்திடம் இருந்து கைப்பற்றியது ஆகும். மேற்படி எதிரி சதாசிவம் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்ய பயிற்சி சார்பு ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள நபர் தான் எதிரி சதாசிவம். பயிற்சி சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

ரோந்து பணிக்கு நாங்கள் மூன்று பேரும் கொடுமுடி காவல்நிலையத்தில் இருந்து காலை 10.00 மணிக்கு கிளம்பினோம் என்றால் சரிதான். நான் ரோந்து பணிக்கு செல்வதற்கு எங்கள் உயர்அதிகாரி உத்தரவிட்டதன் பேரில் நாங்கள் சென்றோம். கொடுமுடி புதிய பேருந்து நிலையத்திற்கு எப்போது சென்றோம் என்றால் காலை 10.15 மணிக்கு சென்றோம். சாலைப்புதூருக்கு 10.45 மணிக்கு சென்றோம். பின்னிட்டு எங்கு சென்றோம் என்றால் நொய்யலுக்கு சென்றோம் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. நொய்யல் முடித்த பின்னிட்டு தாமரைபாளையத்திற்கு சென்றோம். தாமரைபாளையத்திற்கு பின்னிட்டு எங்கு சென்றோம் என்று ஞாபகம் இல்லை. மூன்று பேரும் எவ்வாறு ரோந்துக்கு சென்றோம் என்றால் தனித்தனியாக எங்களது வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளர் கற்பகம் எந்த வண்டியில் வந்தார் என்றால் எந்த வண்டி, மற்றும் வண்டியின் பதிவெண் எனக்கு தெரியாது. அப்பாதுரை எந்த வண்டியில் வந்தார் என்றால் RX 100 என்ற வண்டியில் வந்தார். தாமரைபாளையத்தில் ரோந்து முடித்தபின்னர் ஒத்தக்கடைக்கு வந்துவிட்டோம் என்றால் மற்ற பகுதிகளுக்கும் சென்றுவிட்டு வந்தோம். மற்ற ஊர் என்ன என்பதை குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். ஒத்தக்கடையில் எவ்வளவு நேரம், எங்கு நின்றிருப்போம் என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 09:03:17 +0530

செல்வராகவன் டீக்கடை அருகே நின்று கொண்டிருந்தோம்.

2. எதிரி எங்கு நின்றுகொண்டிருந்தார் என்றால் டீக்கடையில் நின்று கொண்டிருந்தார். எதிரி பணத்தை எங்கு வைத்திருந்தார் என்றால் ஞாபகம்இல்லை. மேற்படி இடத்தில் எதிரியிடம் இருந்து லாட்டரி சீட்டு வாங்கியதை பார்த்தேனா என்றால் இல்லை. எதிரியை யார் பரிசோதித்தது என்றால் உதவி ஆய்வாளரும், நானும் சோதனை செய்தோம். சோதனையின் போது எதிரி லாட்டரி சீட்டுகளை எங்கு வைத்திருந்தார் என்றால் அவருடைய பாக்கெட்டில் இருந்து எடுத்தார், ஆனால் அது சட்டையா அல்லது பேண்ட்டா என்று தெரியவில்லை. எதிரி வைத்திருந்தது கேரளா லாட்டரி சீட்டுகள் என்று எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் லாட்டரியில் ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் லாட்டரி சீட்டில் கேரள மாநிலம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் என்னிடம் காண்பிக்கப்படும் லாட்டரி சீட்டில் புகைப்படம் தெளிவாக இல்லை அதனால் கூற இயலவில்லை.

லாட்டரி சீட்டுகள் Valuable Boxல் இருப்பதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 09:03:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.